# உடன்பிறப்பே... 84

**நீரை.மகேந்திரன்**

திமு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கா.மு.கதிரவன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# கா.மு.கதிரவன் ‘காரோடு வந்த கழகக்காரர்!’

ஓவியம் : ரவி பேலட்



“இஸ்லாமிய சமூக இளைஞரான சம்சுதீன், இந்த இயக்கத்திற்குத் தன்னை ‘கதிரவன்’ என அடையாளம் காட்டிக் கொண்டவர். முப்பதாண்டு காலத்துக்கும் மேலாக, திராவிட இயக்கத்தின் நன்முத்தாக ஒளிவிட்டு, தமிழ்நாடு முழுவதுமுள்ள உடன்பிறப்புகளின் இதயங்களில் எல்லாம் இடம்பெற்று; அமைதி நிறைந்த தோற்றத்தினால், ஆர்ப்பாட்டமற்ற பேச்சினால், ஆடம்பரமற்ற நடவடிக்கைகளினால் பழகுவதற்கு இனிய பண்பாளர்” இப்படி முத்தமிழறிஞர் கலைஞரால் போற்றப்பட்ட அன்பு உடன்பிறப்பு கா.மு.கதிரவன்.

இளமைக் காலம் முதலே திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, நெல்லை மாவட்டத்தில், கழகம் காத்தவர். கழகத்தில் மூத்தவர்கள் நெல்லை கே.எம்.கே. என்றால், கதிரவன் என அறிவர்.

அன்றைய நெல்லை மாவட்டம், செங்கோட்டை அருகில் வல்லம் என்கிற ஊரைச் சேர்ந்தவர் சம்சுதீன். பெற்றோர் முஹமது முஸ்தபா - வெள்ளி இஸ்மாயில் பீவி. நாடார் சமூகத்தில் இருந்து இஸ்லாத்தைத் தழுவியவர்கள் முஹமது அவர்களின் குடும்பத்தினர். பொருளாதார ரீதியில் செல்வாக்குக் கொண்ட குடும்பம். குறிப்பாக, தேயிலைத் தோட்டம், பனைத் தோட்டம் எனச் செல்வந்தர்களாக இருந்தவர்கள். அந்தக் குடும்பத்தில் இருந்துதான் சீர்திருத்த வாதியாக உருவானார் சம்சுதீன்.

## வெளிநாட்டு காரும் எளிமையும்

இடையன்குடி கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியில் படித்த காலத்திலேயே பள்ளி மாணவர் தலைவராக இருந்தவர் சம்சுதீன். 1959-ஆம் ஆண்டு, தென்காசியில் நடைபெற்ற கழக மாநாட்டில் வீச்சாக வேலை செய்த இளைஞர் அண்ணாவின் கவனத்தை ஈர்த்த அன்புத் தம்பியானார்.

கழகத்தின் அனைத்துப் போராட்டங்களிலும் முன்னணியில் நின்ற சம்சுதீன், அப்பகுதியில் கழகத்தினர் அனைவருக்கும் பெருமைப்படத்தக்க எடுத்துக்காட்டாக விளங்கினார்.

கழகக் கூட்டங்கள் எங்கு நடந்தாலும், தனது வீட்டிலிருந்து கார், ஜீப் என எடுத்துக்கொண்டு வந்து விடுவார். தென்காசியில் இருந்து திசையன்விளை வந்தாலும், வழிச் செலவுக்கு எனக் கழகத்தினர் கொடுக்கும் சிறுதொகையையும் பெற்றுக் கொள்ள மறுத்து விடுவார். அன்றையச் சூழலில், அவரே செலவழித்துக் கூட்டம் நடத்தியதும் உண்டு என்கின்றனர் அன்றைய வரலாறு அறிந்தவர்கள். ‘அப்போதே அவரிடம் வெளிநாட்டு காரான ‘ஆஸ்டின்’ கார் இருந்தது. ஆனால், கழகத் தொண்டராக எளிமையாக இருப்பதுதான் அவர் அடையாளம்’ என்பார்கள்.

1963-ஆம் ஆண்டு திருவண்ணாமலை இடைத்தேர்தலின்போது கழக வேட்பாளரான ப.உ.சண்முகம் அவர்களுக்குப் பல மாவட்டங்களில் இருந்தும் இளைஞர்கள் குவிந்து வேலை செய்தனர். கழகத் தேர்தல் பணிமனையில் பாயில் படுத்து உறங்கிய கதிரவனைக் காட்டி, “வசதியான வீட்டுப் பிள்ளை பாயில் படுத்து உறங்குகிறது” எனப் பெருமையாகக் கூறி இருக்கிறார், கழக முன்னோடி அன்பில் தர்மலிங்கம்.

## சீர்திருத்தவாதி

சம்சுதீன் அவர்கள் செல்வந்தர் மட்டுமல்ல, சிறந்த சீர்திருத்தவாதி யாகவும் இருந்தார். இஸ்லாம் மார்க்கம் வலியுறுத்தும் சடங்குகள் எதையும் பின்பற்றியவரல்ல, தொழுகைக்குச் சென்றதில்லை. கழகக் கரைவேட்டியைத் தழையத் தழையக் கட்டுவார். இப்படியாகத் தனது சீர்திருத்தச் சிந்தனையின் உச்சமாக, சம்சுதீன் என்கிற தனது பெயரை **‘கதிரவன்’** என மாற்றிக் கொண்டார். இனமானப் பேராசிரியர் அவர்கள், அந்தப் பெயரைச் சொல்லி அழைத்த நாள் முதல், அவர் அடையாளம் கதிரவன்தான்.

1967-ஆம் ஆண்டு தேர்தலில் தென்காசித் தொகுதியின் வேட்பாளராக, கதிரவனை நிறுத்தினார் பேரறிஞர் அண்ணா. ஆனால், 743 வாக்குகள் குறைவாகப் பெற்று தோல்வியைத் தழுவினார் கதிரவன். அதேநேரத்தில், அதன் பின்னர் ஓராண்டில் நடைபெற்ற இடைத்தேர்தல் களம் கதிரவனைச் சட்டமன்ற உறுப்பின ராக்கியது.

**‘கழகமே குடும்பம், குடும்பமே கழகம்’ என வாழ்ந்து மறைந்த முன்னோடிகளை என்றென்றைக்கும் கழகம் மறக்காது என்பதற்கு, கா.மு.கதிரவன் அவர்களின் களப்பணியே சான்றாகும்.**

## 8 அமைச்சர்கள் களப்பணி

1967-இல் தென்காசித் தொகுதியில் வெற்றிபெற்றிருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிதம்பரம், அடுத்த ஆண்டே காலமானார். அதையடுத்து, அங்கு இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. கா.மு.கதிரவன் கழக வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தார். கழகம் ஆட்சிக்கு வந்தபின்னர், சந்தித்த முதல் இடைத்தேர்தல் என்பதால், கழகத்தின் அமைச்சர்கள் 8 பேர் தொகுதியில் முகாமிட்டு வேலை செய்தனர். குறிப்பாக, பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர், தொகுதியிலேயே தங்கி, தீவிரப் பிரச்சாரம் செய்தார்.

இந்த இடைத்தேர்தலுக்காகத் தயாரிக்கப்பட்ட படம்தான் **‘புதிய பூமி’** என்பார்கள். எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த இந்தப் படத்தில் அவர் கதாபாத்திரத்தின் பெயர் கதிரவன். தென்காசித் தொகுதி வேட்பாளரின் பெயர் கதிரவன். படத்துக்கு வசனம் எழுதியவர், அன்று தென்மண்டலத்தில் கழக முன்னோடியாக இருந்த எஸ்.எஸ்.தென்னரசு. அப்போது இந்தப் படம் பிரச்சாரத்துக்குப் பயன்பட்டதாகச் சொல்வதுண்டு.

**“வாழ்வளிக்கும் கொள்கையை வகுத்து அமலாக்கி வருகிறது, கழக ஆட்சி”** என கதிரவனுக்காக வாக்கு சேகரித்தார் பேரறிஞர் அண்ணா. ‘தமிழ்நாட்டு மக்கள் தி.மு.க.வுக்கு ஆட்சி என்ற விருந்தை அளித்திருக்கிறீர்கள். இந்த இடைத்தேர்தல் என்பது ஊறுகாய் மாதிரி, அறுசுவை விருந்தில் ஊறுகாய் இல்லாவிட்டால் எப்படி?” என தனக்கே உரிய பாணியில் பிரச்சாரம் செய்து, கதிரவன் வெற்றிக்காகக் களத்துக்கு வந்தார் பேரறிஞர் அண்ணா.

அந்த இடைத்தேர்தலில், பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார் கதிரவன். அண்ணாவுக்குப் பின்னர், கலைஞரும் தனது நம்பிக்கைக்குரிய அன்பு உடன்பிறப்பான கதிரவனுக்கு 1971-ஆம் ஆண்டு தென்காசியில் மீண்டும் வாய்ப்பளித்து, வெற்றிபெற வைத்தார்.

1989-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கடையநல்லூர் தொகுதியில் வெற்றிபெற்று வந்தவருக்கு, கழகத்தின் சட்டமன்றத் தலைமைக் கொறடாவாகப் பொறுப்பு வழங்கி, சிறப்புச் செய்தார் கழகத் தலைவர் கலைஞர். அதற்கிடையில் 1980-ஆம் ஆண்டில் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு, ஆயிரம் ஓட்டுகள் வித்தி யாசத்தில் தோல்வியைத் தழுவி இருந்தார்.

## கதிரவன் காட்டிய வழி

கழகத்தின் பல்வேறு பொறுப்புகளிலும், சட்டமன்ற உறுப்பினராகவும் திறம்படச் செயலாற்றிய கதிரவன், 1972- ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று, சிறப்பாகச் செயலாற்றினார். கொள்கை இலக்குடன் கழகத்தினரை அரவணைத்துச் செல்வது, இளையவர்களுக்குப் பொறுப்புகளை அளிப்பது, தலைமைக் கழகத்தின் வழிகாட்டுதல்களைத் தட்டாமல் ஏற்பது எனப் பணியாற்றி வந்த கதிரவன் அவர்கள், எதிர்பாராதவிதமாக 1995-ஆம் ஆண்டு ஏப்ரல் 23-ஆம் தேதி இயற்கை எய்தினார் .

‘கழகமே குடும்பம், குடும்பமே கழகம்’ என வாழ்ந்து மறைந்த முன்னோடிகளை என்றென்றைக்கும் கழகம் மறக்காது என்பதற்கு, கா.மு.கதிரவன் அவர்களின் களப்பணியே சான்றாகும். அவரது மறைவுக்குப் பின், அவரது துணைவியார் மலிகா கதிரவன் தன்னெழுச்சியாகக் கழகப் பணிகளைச் செய்யத் தொடங்கிப் பல இடங்களிலும் புதிய கொடிக்கம்பங்கள் நட்டு கொடியேற்றுவது, கழகக் கூட்டங்கள் நடத்துவது எனக் கணவரின் வழியில், கழகப் பணியாற்றி வருகிறார். அதைப் பெருமைப்படுத்தும் வகையில், கடந்த 2023-ஆம் ஆண்டு முப்பெரும் விழாவில் பாரதிதாசன் விருதினை அளித்து, அவருக்குப் பெருமை சேர்த்தார் இன்றைய கழகத் தலைவர் அவர்கள். அந்தப் பாராட்டுச் சான்று, கதிரவன் காட்டிய கழகப் பாதைக்கும் சேர்த்து என்பதைக் காலம் சொல்கிறது.

...துடிக்கும்

## ‘மோதி’லாளிகளின் ஜனநாயகம்!

2019-ஆம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆட்சி அமைப்பதில் சிவசேனா - பா.ஜ.க.வுக்கு இடையே இழுபறி இருந்தது. அப்போது ஆட்சி அமைக்க நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளில் தொழிலதிபர் அதானி கலந்து கொண்டது பெரும் சர்ச்சைகளை உருவாக்கி உள்ளது. இது தொடர்பாக, பத்திரிகையாளர் விஜயசங்கர் “மோதி’லாளிகளின் ஜனநாயகம்” என விமர்சனம் செய்துள்ளார்.

முதலாளிகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இருக்கும் காதல் ‘தேர்தல் பத்திரம்’ என்கிற மாபெரும் ஊழலில் வெளிப்பட்டது. ஆனால், அதானி போன்ற ‘மோதி’லாளிகள் அரசியல் கட்சிகளுக்கு நிதி கொடுப்பது மட்டுமின்றி, அரசியல் முடிவுகள் எடுக்கும் கூட்டங்களில், நேரடியாகக் கலந்து கொள்கின்றனர் என்கிற உண்மை, இப்போது அம்பலமாகியிருக்கிறது.

மகாராஷ்டிராவில் உத்தவ் தாக்கரேயின் அரசு கவிழ்க்கப் பட்டதற்குப் பின், பண மூட்டைகள் இருந்தன என்று அப்போதே ஒரு குற்றச்சாட்டு எழுந்தது. இப்போது அதை உறுதிசெய்யும் வகையில், சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சியை உடைத்து, எதிர் அணியில் சேர்ந்து, அமைச்சராகியிருக்கும் அஜித் பவார் ஒரு நேர்காணலில் பேசியிருக்கிறார்.

2019-இல் நடந்த ஒரு கூட்டத்தில் அமித் ஷா, தேவேந்திர ஃபட்னாவிஸ், அஜித் பவார், சரத் பவார் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் ‘மோதி’லாளி கவுதம் அதானியும் கலந்து கொண்டதாக அஜித் பவார் கூறியிருக்கிறார். (சரத் பவார் இது குறித்து, இதுவரை வாயே திறக்கவில்லை என்பதும் ஒரு மர்மம்தான்) அரசுகளை அமைப்பதிலும், கவிழ்ப்பதிலும் அதானி, அம்பானி போன்ற பெருமுதலாளிகளுக்குப் பெரும் பங்கிருக்கிறது. முன்பெல்லாம் ‘என்னாங்கடா சுதந்திரம், டாடா பிர்லா சுதந்திரம்’ என்கிற கோஷம் கம்யூனிஸ்டு ஊர்வலங்களில் எழுப்பப்படுவதுண்டு. இப்போது கேட்க வேண்டியது: ‘என்னாங்கடா ஜனநாயகம்? அதானி -அம்பானி ஜனநாயகம்’!

பெரும்பாலான மக்கள் நம்பிக்கையுடன் ஓட்டுப் போடும் வரை இந்தக் கூத்தை சகித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும் என்பதுதான் நம் துரதிருஷ்டம்” எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்

### தாத்தாவின் வழியில் கழகப் பணி!



என்னுடைய தாத்தா செ.முகிலன், தென் சென்னை மாவட்டத் துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்தவர். 1989-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் வெற்றிபெற்று கழகம், மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்தது. அப்போது தேர்தல் பணிகளைச் சிறப்பாக செய்த கழக நிர்வாகிகளை அழைத்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மோதிரம் அணிவித்துப் பாராட்டினார். அதில், எனது தாத்தா முகிலன் அவர்களும் பாராட்டுப் பெற்ற, காலத்தால் அழியாத புகைப்படம். அவருடைய வழியில், நானும் இன்று கழகப் பணியாற்றி வருகிறேன்.

ஜா.அஜய்ராஜ்

**- ஜா.அஜய்ராஜ், சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### புதிய தெம்பும் எழுச்சியும்...

1942-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8-ஆம் தேதி, ‘திராவிட நாடு’ இதழ் தொடங்கப்பட்டது. நீதிக்கட்சிக்கென்று மிகக் குறைவான எண்ணிக்கையில் இதழ்கள் வெளிவந்து கொண்டிருந்தபோது ‘திராவிட நாடு’ இதழ் அனைவரின் கவனத்தைக் கவர்ந்தது. அறிஞர் அண்ணா அவர்களின் ஆழமான கருத்துச் செறிவுள்ள கட்டுரைகளும், அதற்கு அவர் வைக்கும் தலைப்புகளும் எதிரிகளையும் ஈர்ப்புக்கு ஆளாக்கியது. நீதிக்கட்சிக்கும், சுயமரியாதை இயக்கத்துக்கும் புதிய தெம்பையும், தமிழ்நாடெங்கும் எழுச்சியையும் ‘திராவிடநாடு’ இதழ் தொடங்கி வைத்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

661

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131